Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 44/2025**

Preliminary Register

Deposition of **PW- 6 LW - 10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சுப்ரமணியன் | Father Name | : | அண்ணதுரை |
| Village | : | தளவாய்புரம் | Taluk | : | ராஜபாளையம் |
| Age | : | 31 | Calling | : | உதவி ஆய்வாளர். – தளவாய்புரம் காவல் நிலையம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 14th day of May 2026.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது ராஜபாளையம், தளவாய்புரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.06.2025 ம் தேதி நிலைய பொறுப்பில் இருந்தபோது தஞ்சாவூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் படி உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த அ.சா.1 காமராஜ் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று காலை 14.00 மணிக்கு நிலைய குற்ற எண்.192/2025, ச.பி.281, 125(a) BNSன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அன்றைய தினம் காலை 15.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் குமார், அன்பழகன், ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி

வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகசர் மற்றும் மாதிரி **வரைபடம் முறையே அ.த.சா.ஆ.5 மற்றும் அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பட்டியல் சாட்சிகள் 1 மற்றும் 3 முதல் 6 வரையிலானவர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் பட்டியல் சாட்சி 2 ஐ விசாரணை செய்தேன். இவ்வழக்கின் சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால் எதிரியை கைது செய்ய தேடிய போது காவல் நிலையத்தில் எதிரி ஆஜரானார்.. அவரை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தேன். விபத்து ஏற்படுத்திய வாகனம் TN 07 AR 6509 Tata Indica car வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.பாபு அவர்களுக்கு அனுப்பி வாகனத்தை ஆய்வு மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுகோள் அறிக்கை கொடுத்தேன். பின்னர் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கைகள் பெற்றேன். **அந்த ஆய்வு அறிக்கை அ.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் காயம்பட்ட பட்டியல் சாட்சி 2 திருநாவுக்கரசிற்கு முதல் உதவி சிகிச்சை மற்றும் மேல்சிகிச்சை அளித்த மருத்துவர்கள் ராஜவைஷ்ணவி மற்றும் விமலநாத் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும் பட்டியல் சாட்சி 2ற்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என காயச்சான்று பெற்றேன். **அந்த விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று அ.த.சா.ஆ.8 மற்றும் அ.த.சா.ஆ.9ஆக குறியீடு செய்யப்படுகிறது. மருத்துவர்கள் வழங்கிய கருத்துரையின் படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன். அந்த அறிக்கை அ.த.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிரிவு 294(1)(3) Cr.P.C மற்றும் பிரிவு 330 BNSS, விதி 293 Crp 2019ன் படி மனு தாக்கல் செய்து எதிரி தரப்பில் ஆட்சேபணை இல்லை எனப் பெறப்பட்டு மருத்துவ ஆவணங்கள் மற்றும் மோட்டார் ஆய்வறிக்கை குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** -

இவ்வழக்கின் குற்ற நிகழ்வு நாள் என்பது 11.06.2025 காலை 09.00 மணி என்று முதல் தகவல் அறிக்கையில் கண்டுள்ளது என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் என்பது 21.06.2025 மதியம் 02.00 மணி என்று கண்டுள்ளது என்றால் சரிதான். 10 நாட்கள் காலதாமதத்திற்கு காரணம் குறித்து

புகாரிலோ, வாக்குமூலத்திலோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு 26.06.2025 அன்று அனுப்பப்பட்டு நீதிமன்றத்தால் பெறப்பட்டுள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். 5 நாட்கள் காலதாமத்திற்கான காரணம் குறித்து விசாரணை செய்து விசாரணை அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்கின் சம்பவயிடமானது கும்பகோணம் - நீடாமங்கலம் செல்லும் வடக்கு தெற்கான சாலை என்றால் சரிதான். அந்த சாலையில் கிழக்கு புறத்தில் தான் மாத்தூர் செல்லும் ரோடு பிரிகிறது என்றால் சரிதான். சாலையின் மேற்கு பகுதியில் தான் பார்வதி அம்மன் கோவில் உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தில் பார்வதி அம்மன் கோவில் மற்றும் மாத்தூர் ரோடு தவறான திசையில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் எனது வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளது மாத்தூர் ரோடு அல்ல மாத்தூர் வாய்க்கால். மாத்தூர் வாய்க்கால் என்று நான் குறிப்பிடுவது ரோட்டின் கிழக்கு புறத்தில் உள்ளது என்றால் சரியல்ல. ரோட்டின் மேற்கிலிருந்து கிழக்காக செல்கிறது. இந்த வரைபடத்தில் சாலையின் கிழக்கு பகுதியில் பார்வதி அம்மன் கோவில் என கண்டுள்ளது என்றால் பார்வதி அம்மன் கோவில் நான் வரைபடத்தில் குறிப்பிடவில்லை. நான் சம்பவயிடம் செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள அருகாமையில் உள்ள நபர்கள் யாரையும் இவ்வழக்கில் சாட்சியாக விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.8 புகார்தாரர் எந்த நேரத்தில் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் நான் சம்பவயிடத்திற்கு நேரடியாக சென்று விசாரணை செய்யவில்லை என்றாலும், சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் எதிரியை கைது செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்காக என்னால் தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் என்னால் வழக்கிற்காக பொய்யாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள் நேரத்தில் புகார் ஏதும் பெறப்படவில்லை என்றாலும் வழக்கு ஏதும் பதிவு செய்யப்படவிலலை என்றாலும்,

வழக்கினை சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறுதலாக குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.05.14 15:10:02 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.